பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 13 வியாழக்கிழமை 01.12.2022 கதிர் 278

பல்கலைக்கழக அனுமதிக்கான

## வெட்டுப்புள்ளிகள் நாளை வெளியீடு

2021 ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான வெட்டுப்புள்ளி, நாளை (02) வெளியிடப்படவுள்ளது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தகவல்கள் தெரிவிக்கின்றன. 2

# நாமே இலங்கையின் உண்மையான நண்பன்



சாணக்கியனுக்குச் சீனா பதிலடி

நாமே இலங்கையின் உண்மையான நண்பன். தற்போதைய பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க இலங்கைக்கு ஆதரவளிக்க சர்வதேச நிதி அமைப்புக்களை நாம் ஊக்குவித்து வருகின்றோம்.

–இவ்வாறு சீனா தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதான பங்குதாரர் என்ற வகையில், சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்களை உடனடியாக இலங்கைக்கு ஆதரவளிக்குமாறு சீனா ஊக்குவித்து வருகின்றது என்று 2



# கோட்டாவைக் கொலைசெய்ய பாதுகாப்பு அதிகாரிகளே சதி!

‘ஜூன் 9’ அவரைக் காப்பாற்றியது ‘ரிவி’யே என்கின்றார் விமல் எம்.பி.

**“ஜனாதிபதி மாளிகைக்குள் வைத்து கோட்டாபய ராஜபக்ஷவைக் கொல்வதற்கான ஒரு சதித் திட்டம் இருந்தது உண்மை. பாதுகாப்பு அதிகாரிகளே அந்தத் திட்டத்தை வகுத்திருந்தார்கள்”.** 8





## புகழ்மாலை பாடி மஹிந்தவை ஓரங்கட்ட முயலும் கெஹலிய

மஹிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவம் அன்று இல்லை என்றால் இன்றும் யுத்தம் நடந்துகொண்டிருக்கும். யுத்தத்தை முடித்த வைத்த தலைவனே மஹிந்த.

–இவ்வாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துக் கூறுகையில்,

மஹிந்த இந்த நாட்டுக்குச் செய்ய வேண்டிய சேவை அனைத்தையும் செய்துவிட்டார். அவர் 80 வயதை நெருங்குகின்றார்.

அவர் ஓய்வெடுப்பது நல்லது. யாரும் அவரை அவர்களின் அரசியல் தேவைக்காகப் பயன்படுத்தினால் 2

## மூன்று அமைச்சர்களுக்கு ஆப்படிக்க ‘மொட்டு’ தயார்

நாடாளுமன்றத்தில் தற்போது விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் மூன்று அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டைத் தோற்கடிப்பதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குள் திட்டம் தீட்டப்படுகின்றது என்று அறியமுடிகின்றது. 2

## கட்சி தாவல் தொடர்பில் ரணிலுடன் பலரும் பேச்சு

இராஜாங்க அமைச்சர் ஷெஹான் தெரிவிப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த பலர் தொடர்ச்சியாகப் பேச்சுக்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் எப்போது அவருடன் இணைந்து கொள்வார்கள் என்பதை உறுதியாகக் கூற முடியாது.

– இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் 2

யாழ். அரியாலையில் சோகம்

## ரயிலுடன் மினி பஸ் மோதி விபத்து; சாரதி உயிரிழப்பு



(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம், அரியாலை ஏ.வி. வீதியில் ரயிலுடன் மோதி மினி பஸ் விபத்துக்குள்ளானதில் குறித்த பஸ்ஸின் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இன்று பிற்பகல் ஒரு மணியளவில் கொழும்பிலிருந்து காங்கேசன்துறை 2

வான் நோக்கி துப்பாக்கிச்சூடு:

## சட்டத்தரணி உட்பட மூன்று பேர் கைது

பாணந்துறையில் நேற்றிரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் சட்டத்தரணி ஒருவர் உட்பட மூன்று பேர் இன்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பாணந்துறை – சில்வன் ஒழுங்கைப் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பெண் ஒருவர் 2

## ரயிலுடன் மோதி தீப்பற்றிய ஓட்டோ; ரஷ்யப் பெண் உட்பட 2 பேர் மரணம்



ஓட்டோ ஒன்று ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ரஷ்யப் பிரஜையான பெண் உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

காலி மாவட்டம், ஹபராதுவ, தலவெல்ல – மஹரம்ப ரயில் கடவைக்கு அருகில் இன்று இந்த 2

## வெட்டுப் புள்ளிகள் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழகங்களுக்கு மாண வர்களை இணைத்துக்கொள்வதற்காக வரலாற்றிலேயே முதல் தடவையாக விண்ணப்பப்படிவங்கள் கோரப்பட்டு மிகவும் குறுகிய காலத்துக்குள் பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களை அனுமதிக்கும் வெட்டுப் புள்ளிகள் வெளியிடப்படவுள்ளமை விசேட அம்சமாகும்.

இதன்படி பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு இரண்டு மாதம் ஒரு வாரத்துக்குள் வெட்டுப்புள்ளிகளை வெளியிட பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

## நாமே இலங்கை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் உள்ள சீனத் தூதரகம் இன்று தெரிவித்துள்ளது.

நாட்டின் கடனை மறுசீரமைக்கும் முயற்சியில் இலங்கையின் அனைத்து கடன் வழங்குநர்களின் கூட்டங்களிலும் சீனா தீவிரமாகப் பங்கேற்றது என்றும் தூதரகம் கூறியுள்ளது.

சீனாவின் நிதி நிறுவனங்கள் கடந்த ஏப்ரல் மாதம் நிதி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கியைத் தாமதமின்றி தொடர்பு கொண்டது என்றும் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

பல்வேறு வங்கிகளின் பணிக் குழுக்கள் நாட்டுக்குப் பயணம் செய்து வருகின்றன என்றும், இருதரப்புப் பேச்சுக்கள் தொடர்கின்றன என்றும் அது கூறியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்த கருத்துக்குப் பதிலளிக்கும் வகையிலேயே சீனத் தூதரகத்தால் இந்த அறிக்கை வெளியிடப் பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், சீனா இலங்கையின் உண்மையான நண்பன் அல்ல என்று குறிப்பிட்டிருந்தார்.

உண்மையான நண்பராக இருந்தால், சர்வதேச நாணய நிதியக் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளுக்கு சீனா ஏன் உதவவில்லை என்றும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

## ரயிலுடன் மோதி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விபத்து இடம்பெற்றுள்ளது. இதில் 62 வயதான ஓட்டோ சாரதியும், ரஷ்யப் பிரஜையான பெண்ணும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

குறித்த பெண் தனது பிள்ளையை முன்பள்ளிக்கு அனுப்பிவிட்டு, வீடுதிரும்பிக் கொண்டிருந்தபோதே விபத்துக் குள்ளாகியுள்ளார். மேற்படி ரயில் கடவையில் உள்ள கடவை தடுப்பு இயங்கவில்லை என்றும், அது தொடர்பில் வாகனச் சாரதிகளுக்கான எச்சரிக்கை காட்சிப்படுத்தப்பட்டிருந்தநிலையிலேயே இந்ச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தின் பின்னர் ஓட்டோ தீப்பற்றி எரிந்துள்ளது என்றும் பொலிஸார் மேலும் கூறியுள்ளனர்.

## ரயிலுடன் மினி பஸ் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாக்கிச் சென்ற ரயிலுடன் மினி பஸ் மாதுண்டே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் அப்பகுதியைச் சேர்ந்த தனபாலசிங்கம் சுரேந்தர் (வயது 31) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் பாதுகாப்பற்ற ரயில் கடவை காணப்படுவதால் அதிக விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

## மூன்று அமைச்சர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர்களான விஜயதாஸ ராஜபக்ச, நிமால் சிறிபால டி சில்வா, நஸீர் அஹமட் ஆகியோரின் அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகளையே தோற்கடிப்பதற்குத் திட்டமிடப்படுகின்றது என்று அறியமுடிகின்றது.

இந்த அமைச்சுக்களால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு எந்தவித பிரயோசனமும் இல்லை என்றும், எதுவித உதவியும் இந்த அமைச்சுக்களால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குக் கிடைப்பதில்லை என்றும் தெரிவித்தே இந்த அமைச்சுக்களைத் தோற்கடிப்பதற்குத் திட்டம் தீட்டப்படுகின்றது என்று 'மொட்டு'க் கட்சி வட்டாரத்தில் இருந்து அறியமுடிகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பகைத்துக்கொண்டு நிமால் சிறிபால டி சில்வாவும் – ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைப் பகைத்துக்கொண்டு நஸீர் அஹமட்டும் அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றதால் அந்தக் கட்சிகளின் ஆதரவும் 'மொட்டு'க் கட்சியின் திட்டத்துக்குக் கிடைக்கும் என்று நம்பப்படுகின்றது.

## புகழ் மாலை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கு நான் இணங்கமாட்டேன். நெல்சன் மண்டேலாவின் மரணத்தின்போது உலகத் தலைவர்கள் அனைவரும்கலந்துகொண்டனர். அப்படியொரு கௌரவம் மஹிந்தவுக்குக் கிடைக்க வேண்டும் – என்றார்.

## கட்சி தாவல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் கூறியதாவது:- வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவு வழங்குவது, அமைச்சுப் பதவிகளைப் பெறுவது போன்ற பல விடயங்களை முன்வைத்து எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த பலர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுக்களை நடத்தி வருகின்றனர்.

அவர்கள் எப்போது இணைவார்கள் என்று உறுதியாகக் கூற முடியாது.

பேச்சுக்களில் ஈடுபடும் அனைவரும் அரசாங்கத்துடன் இணைந்து கொள்வார்கள் என்றும் சொல்ல முடியாது – என்றார்.

## சட்டத்தரணி ......

அப்பகுதியைச் சேர்ந்த ஒருவருக்குக் கடன் கொடுத்துள்ளார்.

பணத்தைத் திருப்பிக் கொடுக்காதமை குறித்து விசாரிப்பதற்காக குறித்த பெண், சட்டத்தரணியுடன் அங்கு சென்றுள்ளார்.

அதன்போது, இரு தரப்பினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டதையடுத்து சட்டத்தரணி வான் நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தமது உரிமம் பெற்ற துப்பாக்கியைப் பயன்படுத்தியே குறித்த சட்டத்தரணி வானத்தை நோக்கி சுட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, குறித்த துப்பாக்கி மற்றும் சட்டத்தரணிக்குச் சொந்தமான வாகனம் என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அதிகாரம் வந்தால்.....!

மூத்த தமிழ் ஊடகவியலாளர் ஒருவர் தமது வழமையான பத்தி எழுத்தின் இறுதியில் ஒரு விடயத்தை முத்தாய்ப்பாகக் குறிப்பிட்டு இருந்தார்.

“ஒரு வருடம் அதிகாரத்தை கொடுத்துப் பாருங்கள். அவரின் உண்மையான சுபாவம் தெரியவரும்” – என்ற விடயத்தை அவர் சுட்டி இருந்தார்.

உண்மைதான். அந்தக் கூற்றில் உள்ள உண்மையை நாம் அனுபவப் பாடமாகப் படித்து வருகிறோம்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை நாட்டுக்கு அறிமுகப்படுத்தி, அதன் கீழ் தமிழர் தேசத்தின் மீது ஐக்கிய தேசியக் கட்சி போர் தொடுத்து, 17 ஆண்டுகள் கொடூரங்கள் தொடர்ந்த போது மக்கள் – குறிப்பாகத் தமிழ் மக்கள் – சந்திரிகா குமாரதுங்கவை சமாதான தேவதையாகக் கண்டார்கள். ஜனாதிபதித் தேர்தலில் அவருக்குப் பெருவெற்றியைத் தேடிக் கொடுத்தனர்.

பின்னர் என்ன நடந்தது? சமாதான தேவதை என்ற முகமூடியைக் கழற்றி எறிந்து விட்டு, கொடூரப் போர் இராட்சசியாகத் தம்மைத் தமிழருக்குத் தோற்றம் காட்டினார் அவர். கொடூரமான போரையும் பெரும் இடப் பெயர்வுகளையும் தமிழர் தேசம் மீது ஏறிவிட்டார். அவர் ஆட்சியில் இருந்து நீங்கும் வரை சமாதான தேவதை என்ற சொரூபம் எதையும் அவர் காட்டவே இல்லை. தீவிரப்போரை ஏவிவிட்ட சிங்களத் தலைவராகவே காணப்பட்டார்.

ரணசிங்க பிரேமதாஸா தலைமையில் இருண்ட யுகம் இலங்கை மீது கவிழத் தொடங்கிய சமயத்தில், அதற்கு எதிராக, மக்களின் உரிமைகளுக்காகவும் அடிப்படை மனித உரிமைகளுக்காகவும் கொதித்து எழுந்தவர் இளம் அரசியல்வாதியான மஹிந்த ராஜபக்ஷ.

அச்சமயத்தில் மனித உரிமைகள் காவலராக தோற்றம் காட்டினார் அவர். இலங்கையில் மனித உரிமைகள் மீல்களுக்காக நீதி வேண்டி, ஜெனீவா மனித உரிமைகள் மன்றம் வரைச் சென்று போராடினார் மஹிந்தர். அந்தச் சமயத்தில் உண்மையான மனித உரிமைப் போராளியாக எல்லோராலும் அவர் நோக்கப்பட்டார்.

கடைசியில் அவரிடம் அதிகாரம் வந்ததும் நிலைமை என்னவாயிற்று?

ராஜபக்ஷக்களின் உண்மை முகத்திற்கும் மனித உரிமைகளை மதிக்கும் மாண்புக்கும் இடையிலான வேறுபாடு மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேற்பாட்டுக்கு ஒத்தது என்பதை நாட்டு மக்கள் காலம் பிந்தித்தான் படித்துக் கொண்டனர்.

இப்போதுஅதிகாரத்தைபெற்றுக்கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் முக மாற்றமும் அப்படிப்பட்டதுதான். கடைசியாகத் தாம் பிரதமராக இருந்த போது கூட, அறகலையப் போராட்டம் தொடர வேண்டும் என்று நிபந்தனை விதித்தவர் அவர். இப்போது அதற்கு எதிராக இராணுவத்தையும் அவசரகாலச் சட்டத்தையும் ஏவுவேன் எனச் சூளுரைக்கிறார்.

இப்போது மனித உரிமைகளுக்காகத் தினசரி ஓலமிடும் சஜித் பிரேமதாஸா கூட நாளை அதிகாரம் கைக்கு வந்து விட்டால் தந்தையார் ரணசிங்க பிரேமதாஸா ஆகிவிடுவார் என்று கருதலாம்.

அதுதான் அதிகாரம் என்ற சூனியக்காரனின் மந்திரக்கோலின் மாண்பு!

# வலி. வடக்குப் பிரதேச சபையின் பாதீடு ஏகமனதாக நிறைவேற்றம்!







வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் பாதீடு தொடர்பான விசேட கூட்டம் நேற்று (புதன் கிழமை) சபை மாநாட்டு மண்டபத்தில் தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது உறுப்பினர்களால் பாதீடு தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் இடம் பெற்றன. கடந்த காலங்களை விட 2023 ஆம் ஆண்டு பாதீட்டில் தற்போதைய நாட்டின் சூழ்நிலைக்கேற்ப பல்வேறுபட்ட நலத்திட்ட விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன என கட்சிபேதமின்றி அனைத்துக் கட்சி உறுப்பினர்களாலும் பாராட்டி உரைகள் நிகழ்த்தப்பட்டன. சிற்சில விடயங்களுக்கான ஒதுக்கத்தை மேலும் அதிகரித்திருக்கலாம் என்றும் சில உறுப்பினர்களால் ஆலோசனையும் வழங்கப்பட்டது. வாதப் பிரதி வாதங்களைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஐ.மயூரன் பாதீட்டை முன்மொழிந்தார், அதனைப் பாராட்டி உரையாற்றிய ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் க.சீத்தாராமன், தமது கட்சி உறுப்பினர்கள் அனைவரும் அதனை ஆதரிக்கின்றோம் என்று கூறி வழிமொழிந்தார்.

தவிசாளரால் வேறு யாராவது இது தொடர்பில் கருத்துரைக்க – அல்லது மாற்றுக் கருத்துக்கள் உள்ளனவா? என்று வினாவெழுப்பப்பட்டது.

அதற்கு அனைவரும் மௌனம் காத்தனர். எவ்வித எதிர்ப்புகளுமின்றி – வாக்கெடுப்பின்றி – 2023 ஆம் ஆண்டுக்கான பாதீடு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வலி.வடக்கு பிரதேசசபையில் புதிய சபை தேர்ந்தெடுக்கப்பட்ட கடந்த ஐந்து ஆண்டு காலமும் பாதீடு ஏகமனதாகவும் பெரும்பான்மை வாக்குகளாலும் நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சமீபத்தில் அமரத்துவம் அடைந்த எழுத்தாளர்களின் நினைவுப்பகிர்வு

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட எழுத்தாளர்களின் நினைவுப்பகிர்வு எதிர்வரும் சனிக்கிழமை பி.ப. 5 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க தலைவர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் தலைமையில் விநோதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சாகித்திய ரத்னா விருது பெற்றவர்களான அமரர் கே.எஸ்.சிவகுமாரன், அமரர் தெளிவத்தை ஜோசப் ஆகியோர்களது அஞ்சலி உரையை முறையே எழுத்தாளர் எழுத்தாளர் கந்தையா பத்மானந்தன் (சைவப்புலவர்) அவர்களும், எழுத்தாளர் பதுளை கோ.சேனாதிராஜா (சிரேஷ்ட சட்டத்தரணி) அவர்களும் ஆற்ற உள்ளனர். திருமதி வளர்மதி சுமாதரன் (நிர்வாகக்குழு உறுப்பினர் – கொழும்புத் தமிழ்ச் சங்கம்) நன்றி உரையை நிகழ்த்துவார்.

# உலக அழகு ராணி போட்டிக்கு இவன்ஜலின் லண்டனில் இருந்து ஜப்பானுக்குப் பறந்தார்;!

## 80 நாடுகள் பங்கேற்பு




(வி.ரி. சகாதேவராஜா)

ஜப்பானில் நடைபெற இருக்கும் ஜப்பான் டோக்கியோ சர்வதேச அழகு ராணி போட்டியில் கலந்து கொள்ள இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட இவன்ஜலின் பிரான்சியா லட்சுமணர் ஜப்பான் பயணமானார்.

லண்டனில் வசிக்கும் தற்போதைய ஐக்கிய இராச்சிய உலக அழகி இவன்ஜலின், இலங்கை அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளியைப் பூர்வீகமாகக் கொண்டவர். இவர் இலட்சுமணர் சாந்தி தம்பதியரின் புதல்வியாவார்.

ஐக்கிய ராஜ்யத்தில் உலக அழகு ராணியாக 2021 – 22 இல் தெரிவாகிய இவன்ஜலின் அதுக்கு முன்பு பெரிய பிரித்தானியாவில் உலக இளம் அழகியாக 2017 – 18 இல் தெரிவானவர். இவர் ஜப்பானில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி நடைபெற இருக்கும் அறுபதாவது உலக அழகி போட்டியில் கலந்துகொள்ள கடந்த திங்கட்கிழமை லண்டனில் இருந்து ஜப்பான் பயணமானார் .

இந்த ஜப்பான் சர்வதேச உலக அழகி போட்டி எதிர்வரும் டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி நடைபெற இருக்கின்றது. அதில் 80 இற்கும் அதிகமான நாடுகளில் இருந்து அழகிகள் கலந்து கொள்ள உள்ளனர்.

உலக அழகு ராணி 2015 இல் ஐக்கிய ராஜ்யத்தின் 15 வயது அழகு ராணி போட்டியில் தெரிவாக 2015 லண்டன் அவருது குமாரி போட்டியிலும் தெரிவாகி இருந்தவர்.

இவர் தற்போது பிரித்தானிய பிரஜையாக இருந்தபோதிலும் அவருடைய பெற்றோர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்கள்.

இவர் பிரித்தானியாவில் பல தர்ம ஸ்தாபனங்களைநடத்திவருகின்றார். அதனூடாக இவர் மட்டக்களப்பு பகுதிகளிலேவீடற்றவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்ததோடு காலி பகுதியில் பாடசாலை மாணவர்களுக்கு சீருடை வழங்கி வைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானில் தற்கொலைத் தாக்குதலில் பொலிஸார் உள்பட நான்கு பேர் மரணம்!





இஸ்லாமாபாத், டிசெ.01

பாகிஸ்தானிய அரசாங்கம் அங்குள்ள குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு மருந்து வழங்குவதன் மூலம் போலியோ பரவலை முயற்சித்து வருகிறது. ஆனால் அங்குள்ள பயங்கரவாதிகள் போலியோ தடுப்பு மருந்து வழங்குவது பாகிஸ்தான் குழந்தைகளை மலடாக்க மேற்கத்திய நாடுகள் செய்யும் சதி என குற்றம் சாட்டி, அரசின் இந்த முயற்சியைச் சீர்குலைத்து வருகின்றனர்.

அந்த வகையில் பாகிஸ்தானில் சமீப ஆண்டுகளாக போலியோ தடுப்பு மருந்து வழங்கும் மருத்துவ ஊழியர்கள் மற்றும் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பொலிஸாரைக் குறிவைத்துப் பயங்கரவாதிகள் தொடர்ச்சியாகத் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் பலூசிஸ்தான் மாகாணத்தின் தலைநகர் குவெட்டாவில் உள்ள பவேலி என்கிற இடத்தில் நேற்று போலியோ தடுப்பு மருந்து முகாம் நடந்தது. இதையொட்டி போலியோத் தடுப்புக் குழு ஊழியர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக இருபதுக்கும் மேற்பட்ட பொலிஸார் தமது வாகனத்தில் சென்று கொண்டிருந்தனர்.

அப்போது தற்கொலைப்படை பயங்கரவாதி ஒருவர் வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட ரிக்ஷாவை பொலிஸ் வாகனத்தின் மீது மோதி வெடிக்க செய்தார். இதில் அந்தப் பகுதியே அதிர்ந்தது. குண்டு வெடிப்பில் சிக்கி 4 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்தனர். மேலும் 23 பொலிஸார் உள்பட 26 பேர் பலத்த காயம் அடைந்தனர். அவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு அருகில் உள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை மேலும் உயரலாம் என அஞ்சப்படுகிறது.

இதனிடையே இந்தத் தாக்குதலுக்கு பாகிஸ்தான் தலீபான் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. அரசுடன் செய்து கொண்ட சண்டை நிறுத்த ஒப்பந்தம் முடிவுக்கு வந்துவிட்டதாக அந்த அமைப்பு கடந்த 2 நாள்களுக்கு முன்பு அறிவித்திருந்த நிலையிலே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

போலியோ தடுப்பு குழுவின் பாதுகாப்புக்காக சென்ற பொலிஸாரைக் குறிவைத்து நடத்தப்பட்ட இந்த தற்கொலைப்படை தாக்குதலுக்கு பாகிஸ்தான் பிரதமர் பாஸ் ரெீப் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். மேலும், இந்த சம்பவம் குறித்து விரிவான விசாரணை நடத்தி தாக்குதலுக்கு காரணமானவர்களை நீதியின் முன் நிறுத்த அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டுள்ளார். மேலும் அவர், நாட்டிலிருந்து போலியோ தொற்றை அகற்றுவது அரசின் முதன்மையான முன்னுரிமைகளில் ஒன்றாகும். போலியோ முற்றிலும் ஒழிக்கப்படும் வரை நாங்கள் ஓய மாட்டோம் எனவும் தெரிவித்துள்ளார்.

## தாய்லாந்தில் போதைக்கு அடிமையாகிய பௌத்த துறவிகள் நான்கு பேர் சிக்கினர்



பாங்காங், டிசெ.01

தாய்லாந்து நாட்டின் பெத்சாபன் மாகாணத்தில் பங் சாம் பான் என்ற மாவட்டத்தில் பௌத்த கோவிலில் இருந்த தலைமை சாமியார் உள்பட நான்கு துறவிகளிடம் போதை பொருள் பரிசோதனை நடத்தப்பட்டது.

இதில், அனைவரும் மெத்தாம்பிடமைன் போதை பொருள் பயன்படுத்தி உள்ளனர் என்பது உறுதியானது.

இதனை தொடர்ந்து, கோவிலில் அவர்கள் மேற்கொள்ளும் சடங்குகள் உள்ளிட்டவற்றை செய்வதற்கு தடை விதிக்கப்பட்டது. அவர்களின் புனிதர் அந்தஸ்தும் பறிக்கப்பட்டது. இதன்பின்பு, போதை பொருள் மறுவாழ்வு சிகிச்சைக்காக சுகாதார மருத்துவமனைக்கு அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதன் காரணமாக கோவிலில் சாமியார்களே இல்லாத சூழலில், அருகேயுள்ள கிராமங்களை சேர்ந்தவர்கள் எந்தச் சடங்குகளையும் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. கோவிலில் சாமி கும்பிட வருபவர்கள், சாமியார்களுக்கு அவர்களின் நல்ல செயல்களுக்காக நன்கொடையாக உணவு வழங்குவார்கள். தற்போது, இதனை செய்ய முடியாத சூழல் உள்ளது என அவர்கள் வருத்தம் தெரிவித்தனர். தாய்லாந்து நாட்டுக்கு மியான்மரில் இருந்து லாவோஸ் வழியே போதை பொருள் பரிமாற்றம் நடந்து வருகிறது என ஐ.நா. போதை பொருள் மற்றும் குற்றச் செயல்களுக்கான அலுவலகம் தெரிவிக்கிறது. இதன்படி அரை டொலருக்கு குறைவான விலையில் தெருவிலேயே போதை பொருள்கள் விற்கப்படுகின்றன என்றும் கூறப்படுகின்றது.

## மீண்டும் சீனாவில் குழப்பநிலை மக்கள் வீதிகளில் போராட்டம்..!!




பீஜிங், டிச.01

சீனாவின் கொரோனா பரவலை கட்டுப்படுத்த அரசு விதித்துள்ள கடுமையான கட்டுப்பாடுகளால் அதிருப்தி அடைந்த பொதுமக்கள் கடந்த 24 ஆம் திகதிபோராட்டத்தில் குதித்தனர். ஜின்ஜியாங் மாகாணத்தின் தலைநகர் உரும்கியில் தொடங்கிய இந்தப் போராட்டம் நாடு முழுவதும் பரவி தீவிரமடைந்தது. கடந்த 28ஆம் திகதி வரை தலைநகர் பீஜிங், ஷாங்காய் உள்ளிட்ட நகரங்களில் தொடர் போராட்டங்கள் நடந்து வந்தன.

ஆனால் நேற்று முன்தினம் போராட்டம் தீவிரமாக இருந்து வந்த அனைத்து நகரங்களிலும் பொலிஸார் குவிக்கப்பட்டமையால் போராட்டம் முடங்கியது நேற்று முன்தினம் சீனாவின் எந்தப் பகுதியிலும் போராட்டம் நடக்கவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த நிலையில் சீனாவின் குவாங்டாங் மாகாணத்தின் தலைநகரான குவாங்சூ நகரில் கொரோனாக் கட்டுப்பாடுகளுக்கு எதிராக மக்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர். நூற்றுக்கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடிய நிலையில் அவர்களைக் கலைக்கப் பொலிஸார் முற்பட்டபோது இருதரப்புக்கும் இடையில் மோதல் வெடித்தது.

போராட்டக்காரர்கள் கண்ணாடி போத்தல்கள் உள்ளிட்டவற்றை பொலிஸார் மீது வீசி எறிந்தனர். அதைத் தொடர்ந்து பொலிஸார் தடியடி நடத்தினர் எனவும், பலர் கைது செய்யப்பட்டனர் எனவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

## பாகிஸ்தானில் நிலக்கரிச் சுரங்கம் இடிந்து பெரும் விபத்து; 9 பேரின் சடலங்கள் மீட்பு!




*இஸ்லாமாபாத், டிசெ.01*

*பாகிஸ்தானின் கைபர் பாக்துன்க்வா மாகாணம் ஒரக்சாய் மாவட்டத்தில் உள்ள நிலக்கரி சுரங்கத்தின் மேற்பகுதி திடீரென இடிந்து விழுந்துள்ளமையால் தொழிலாளர்கள் பலர் அதற்குள் சிக்கிக்கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.*

*இதுபற்றி தகவல் அறிந்த மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு சென்று மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்றும் சுரங்க இடிபாடுகளில் இருந்து 9 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில், 4 பேர் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டனர் எனத் தகவல் வெளியாகி உள்ளது.*

*விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். கனிம வளத்துறை அதிகாரிகள் கொண்ட குழு, சம்பவ இடத்தை நேரில் ஆய்வு செய்தனர். இந்நிலையில், எரிவாயு தீப்பற்றியதால் விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.*

# இந்திய - அமெ. படைகள் கூட்டு இராணுவப் பயிற்சி

## ஒப்பந்த மீறல் என்கிறது சீனா



பீஜிங், டிசெ.01

உத்தரகாண்டில் இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகள் இணைந்து கூட்டு இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டு உள்ளன. இந்தியா மற்றும் அமெரிக்காவின் 18 ஆவது கூட்டு இராணுவப் பயிற்சி 'யுத் அப்யாஸ் 2022' என்ற பெயரில் தற்போது நடை பெற்று வருகின்றது.

அமெரிக்க இராணுவத்தின் 11 ஆவது வான்படை பிரிவை சேர்ந்த வீரர்களும், இந்திய இராணுவத்தின் அசாம் படை பிரிவினரும் இந்த பயிற்சியில் பங்கேற்கின்றனர்.

இந்நிலையில், இந்தியா, அமெரிக்கா இடையேயான கூட்டு இராணுவ பயிற்சிக்கு சீனா

இன்று தனது எதிர்ப்பைத் தெரிவித்து உள்ளது. அசல் எல்லைக் கோட்டுக்கு அருகே நடந்து வரும் இந்தப் போர் பயிற்சியானது, இந்தியா மற்றும் சீனா இடையே மேற்கொள்ளப்பட்ட எல்லை ஒப்பந்தங்களை மீறும் வகையில் உள்ளது என சீனா தெரிவித்து உள்ளது.

சீனா மற்றும் இந்தியா இடையே கடந்த 1993 மற்றும் 1996 ஆகிய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை மீறும் செயல் என சீன வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ஜாவோ லிஜியான் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார். இந்தக் கூட்டு இராணுவ பயிற்சியானது, சீனா மற்றும் இந்தியா இடையேயான பரஸ்பர நம்பிக்கைக்கு ஏற்ற வகையில் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

ஆனால், கடந்த 2020 ஆம் ஆண்டு மே மாதத்தில் கிழக்கு லடாக்கில், இதே சீனா தனது படைகளை அதிக எண்ணிக்கையில் குவிக்கும் முயற்சியில் ஈடுபட்டது. அது சர்ச்சைக்குரிய அசல் எல்லை கோட்டு பகுதியில் நடந்தது. அப்போது, இருதரப்பு ஒப்பந்தங்களை மீறும் வகையில் சீனா நடந்து கொண்டது. எனினும், பேச்சுவார்த்தை வழியே இதற்கு தீர்வு காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## விமான நிலையங்களுக்கு அருகில் 5ஜீ கோபுரங்களை அமைக்கத் தடை



புதுடெல்லி, டிசெ.01

இந்தியாவில் 5ஜி சேவையைக் கடந்த ஒக்டோபர் முதலாம் திகதி பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். குறிப்பிட்ட சில நகரங்களில் மட்டும் 5ஜி சேவை அமுலுக்கு வந்துள்ள நிலையில், அடுத்த 2 ஆண்டுகளுக்குள் படிப்படியாக நாடு முழுவதும் அது அமுலுக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் விமான நிலையங்களுக்கு அருகே 5ஜி சேவை வழங்கக் கூடாது என தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு மத்திய தொலைத்தொடர்புத்துறை உத்தரவிட்டுள்ளது. விமானக் கருவிகள் பாதிக்கப்படும் என்பதால் விமான நிலையங்களுக்கு அருகே 5ஜி சிக்னல் கோபுரங்கள் அமைக்கக் கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில், விமான நிலையங்களின் ஓடுபாதையின் இருபுரங்களிலும் 2,100 மீட்டர் தூரத்திற்கும், ஓடுபாதையின் மத்திய பகுதியில் இருந்து 910 மீட்டர் தூரத்திற்கும் இடையே 3,300 முதல் 3,670 மெகா ஹெர்ட்ஸ் வரையிலான அலைவரிசையைக் கொண்ட 5ஜி சிக்னல் கோபுரங்கள் அமைக்கத் தடை விதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அடுத்த ஆண்டுகளில் வெப்ப அலைக்கு இந்தியாவில் 20 கோடி பேர் ஆளாவராம்




புதுடெல்லி, டிசெ..01

காலநிலை மாற்றம் உள்ளிட்ட பிரச்சினைகளால் உலகளாவிய வெப்பம் அதிகரித்து வருகின்ற நிலையில் ஒவ்வொரு ஆண்டும் வெப்பத்தின்அளவுகூடிக்கொண்டே செல்கின்றது. இந்த நிலையில் உலக வங்கி, இந்தியாவின் குளிரூட்டும் துறையில் கால நிலை முதலீட்டு வாய்ப்புகள் என்ற தலைப்பில் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், 2030 ஆம் ஆண்டுக் குள் ஆண்டு தோறும் 16 கோடி முதல் 20 கோடிப்பேர் இந்தியாவில் கொடிய வெப்ப அலைகளுக்கு ஆளாகிற அபாயம் உள்ளது." – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் பல விடயங்களை உலகவங்கி தெரிவித்துள்ளது.

அதனடிப்பைடையில், இந்தியாவில் காலநிலை மாற்றம் காரணமாக தொடர்ந்து வெப்பத்தின் அளவு அதிகரிக்கிறது.

மாற்றுமுறை மற்றும் புதுமையான ஆற்றல் திறன் தொழில்நுட்பங்க ளைப் பயன்படுத்தி இடங்களை குளிர்ச்சியாக வைத்திருப்பதற்காக 2040 ஆம் ஆண்ணடளவில் 1.6 டிரில்லியன் அமெரிக்க டொலர் (இந்தியமதிப் பில் சுமார் ரூபா.131லட்சம்கோடி) முதலீட்டுவாய்ப்பு உருவாகும் என்றும், அதிக ஆற்றல் கொண்ட பாதைக்கு மறுவது, அடுத்த இரு பத்தாண்டுகளில் கார்பன்டை ஒக்சைடு அளவை மிகவும் குறைப்பதற்கு வழிவகுக்கும் என்றும், 15 வினாடிகளுக்கு ஒரு ஏ.சி. எந்திரம், மேலும் பசுமைக்குடில் வாயுக்கள் அளவையும் குறிப்பிடத்தக்க அளவுக்கு குறைக்க முடியும். 37 லட்சம் வேலை வாய்ப்புகளையும் உருவாக்க முடியும். என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன்,போக்குவரத்தின் போது வெப்பத்தால் உணவு இழப்பு ஆண்டுக்கு 13 பில்லியன் டொலர் (இந்திய மதிப்பில் சுமார் ரூபா.1லட்சத்து 6 ஆயிரத்து 600 கோடி) அளவுக்கு ஏற்படலாம் எனவும், தற்போதைய அளவுடன் ஒப்பிடுகையில் 2037 ஆம் ஆண்டுக்குள் குளிரூட்டும் தேவை 8 மடங்கு அதிகரிக்கும். அதாவது ஒவ்வொரு 15 வினாடிக்கும் ஒரு ஏ.சி.எந்திரம் தேவை ஏற்படும். இதனால் அடுத்த இரு பத்தாண்டுகளில் பசுமைக்குடில் வாயுக்கள் உமிழ்வு 435 சதவீதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## ஜி-20 தலைமைப் பொறுப்பை ஒட்டி இன்று இந்தியா முழுவதும் ஒளிமயம்!



புதுடெல்லி, டிசெ.01

ஜி20 நாடுகளின் தலைமையை இன்று முதல் இந்தியா ஏற்க உள்ளதையடுத்து, நாடு முழுவதும் உள்ள நினைவுச் சின்னங்களை மின் அலங்கார விளக்குகளால் ஒளிரவிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தோனேசியாவில் கடந்த மாதம் நடந்த ஜி20 உச்சி மாநாட்டில் ஜி-20 அமைப்பின் விதிமுறைகளின்படி, அடுத்தாண்டு ஜி-20 அமைப்பின் தலைமை பொறுப்பை இந்தியா ஏற்கும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி இன்று (டிசம்பர்-01) முதல் அதிகாரப்பூர்வ முறைப்படி ஜி-20 தலைமை பொறுப்பை இந்தியா ஏற்கிறது.

இந்த நிலையில், தஞ்சை பெரிய கோவில் உட்பட நாடு முழுவதும் 100 நினைவுச் சின்னங்களை ஜி-20 இலச்சினையால் ஒளிரச் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நாடு முழுவதும் 50 நகரங்களில் இருநூறுக்கும் மேற்பட்ட கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. அடுத்த ஆண்டு செப்டம்பர் 9 மற்றும் 10ஆம் தேதிகளில் ஜி-20 நாடுகளின் உச்சி மாநாடு நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# சமூக விழிப்புணர்வு குறும்பட விழாவில் வெளியீடுகளும் விருதுகள் வழங்கலும்!





(அபுஅலா)

கிழக்குமாகாணபண்பாட்டலுவல்கள்திணைக்களத்துடன் இளைஞர் அபிவிருத்தி 'அகம்' இணைந்து நடாத்திய சமூக விழிப்புணர்வு குறும்படம் மற்றும் இளைஞர்களின் ஆளுமைவிருத்தி தொடர்பான நாடக வெளியீட்டு விழா கடந்த செவ்வாயன்று திருகோணமலை உவர் மலை விவேகானந்தா கல்லூரி கலையரங்க மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இளைஞர் அபிவிருத்தி 'அகம்' இணைப்பாளர் பொன் சற்சிவானந்தம் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவுக்கு கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கௌரவ விருந்தினர்களாக திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் திருமதி சுலோசனா ஜெயபாலன், பட்டய முகாமைக் கணக்காளர் கலாநிதி இ.ஸ்ரீஞானேஸ்வரன் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக குறும்படத் தயாரிப்பாளர் இயக்குனர் வடமலை ராஜ்குமார், உள்ளூராட்சித் திணைக்களத்தின் சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் சி.சர்வேஸ்வரன், உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் அதிபர் க.ரவிதாஸ், கிளிவெட்டி மகா வித்தியாலய அதிபர் ப.கோணேஸ்வரராஜா, இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப்பணிப்பாளர் எஸ்.ரவிக்குமார், மாவட்ட செயலக மாவட்ட சமூகவேவை அதிகாரி தவராஜா பிரணவன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இவ்விழாவில், மனிதி, வீழ்வேனென்று, அடையல், அறுவதை, வெற்றிக்கதை, பள்ளிக்கூடம் என்ற குறும்படங்களும், தலைமகள் என்ற நாடகமும் அரங்கேற்றப்பட்டன். இதில் மனிதி என்ற குறும்படம் முதலாம் இடத்தினையும், வீழ்வேனென்று என்ற குறும்படம் இரண்டாம் இடத்தினையும், பள்ளிக்கூடம் என்ற குறும்படம் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டன.

சிறந்த திரைக்கதை மற்றும் சிறந்த நடிகருக்கான விருதினை வெற்றிக்கதை குறும்படத்தின் மோகேந்திரன் சாந்தகோபு, வி.கிருபானந்தம் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். சிறந்த இயக்கம் மற்றும் தயாரிப்புக்கான விருதினை மனிதி குறும்படத்தின் விநாயகமூர்த்தி அபிவர்ன் பெற்றுக்கொண்டார். சிறந்த நடிகைக்கான விருதை மனிதி குறும்படத்தின் ஜே.செலினி பெற்றுக்கொண்டார்.

சிறந்த இசை மற்றும் சிறந்த படத்தொகுப்புக்கான விருதினை வீழ்வேனென்று குறும்படத்தின் ஜே.சமீல், ஜே.டி.கொட்வின் செல்லர் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். சிறந்த ஒளிப்பதிவுக்கான விருதையும், சிறந்த குழந்தை நட்சத்திரத்திற்கான விருதையும் பள்ளிக்கூடம் குறும்படத்தின் விவேக்ஷன் மனோகரனும், கோ.கம்ஸத்வேனியும் பெற்றுக்கொண்டனர்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள இளைஞர்களின் ஆளுமைகளை டிஜிட்டல் யுகத்தில் பயனுள்ளதாக்கும் நோக்கிலும், இளைஞர்களுக்கு பயனுள்ள தகவல்களை நம்பிக்கையூட்டும் வகையில் கொண்டு செல்வதற்கும், உரிமை சார் கருத்துக்களை விழிப்புணர்வு செய்வதற்கும் மாவட்ட ரீதியில் நடாத்தப்பட்ட குறும்படம் மற்றும் நாடக வெளியிடலில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கான விருது, சான்றிதழ்களை அதிதிகளினால் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# காரைதீவில் டெங்கு களப் பரிசோதனை பதினாறு வீடுகளுக்கு சிவப்பு அறிவித்தல்







(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்ஸீமா வசீர் தலைமையில் காரைதீவு 12 மற்றும் மாளிகைக்காடு பிரதேசத்தில் விசேட டெங்கு கள பரிசோதனை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நேற்று முன்தினம் மட்டும் 469 வீடுகள் பரிசோதனை செய்யப்பட்டன.

டெங்கு நுளம்பு பெருகக்கூடிய இடங்கள் காணப்பட்ட 16 வீடுகளுக்கு சிவப்பு அறிவித்தல்களும் வழங்கப்பட்டன..

இப் பரிசோதனையில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர், பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் நுளம்பு களத் தடுப்புப் பிரிவினர்கள், காரைதீவு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்களும்,பொதுமக்களும் இணைந்து டெங்கு தள தடுப்பு பரிசோதனையில் கலந்து கொண்டார்கள்.

# சாய்ந்தமருது பிரதேச செயலக ஏற்பாட்டில் வர்த்தக கண்காட்சி

(கே.எ.ஹமீட்)

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வர்த்தக கண்காட்சியும் விற்பனையும் கடந்த புதன் கிழமை பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் தலைமையில் நடைபெற்றது. அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீஸன் பிரதம அதிதியாகக்கலந்து கொண்டு கண்காட்சியையும் விற்பனையையும் ஆரம்பித்து வைத்தார்.

சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்திலுள்ள பல்தேவைக்கட்டடத்தில் அன்று மாலை 5மணி வரை இந்நிகழ்வு இடம் பெற்றது.

'திகாமடுல்ல முயற்சியாண்மமை' எனும் தொனிப்பொருளில் பிரதேச செயலகத்தின் சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப்பிரிவினால் இவ்வர்த்தகக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் சாய்ந்தமருதைச் சேர்ந்த நாற்பதுக்கும் மேற்பட்ட சிறு கைத்தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்திபொருள்களுடன் கலந்து கொண்டனர் என சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.நாஸிர் அலி தெரிவித்தார்.

இதில் சாய்ந்தமருதுப்பிரதேசத்தைச்சேர்ந்த பெரும் திரளான பொது மக்கள் கலந்து கொண்டு பொருள்களைக் கொள்வனவு செய்தனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.







# நல்லூர் பிரதேச சபையின் 2023 பாதீடு நிறைவேற்றம்

யாழ்ப்பாணம் – நல்லூர் பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் 15 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நேற்று (புதன்கிழமை) தவிசாளர் ப.மயூரனால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது இலங்கை தமிழரசுக் கட்சியின் 3 உறுப்பினர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 3 உறுப்பினர்கள், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் 4 உறுப்பினர்கள், சுயேச்சை குழுவின் 2 உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் தலா ஓர் உறுப்பினர் என 15 உறுப்பினர்கள் வரவு – செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

அதே வேளை, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் 2 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது.

# 2023 இல் சிறந்த சுற்றுலாத் தளமாக மட்டக்களப்பை மாற்ற நடவடிக்கை!



மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றுலாத் துறையை மேம்படுத்த காணிகளை அடையாளம் காணும் கலந்துரையாடல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று (புதன்கிழமை) நடைபெற்றது.

இதன்படி, மட்டக்களப்பு மாவட்டத்தில் வெருகல் ஆறு தொடக்கம் மட்டக்களப்பு வரையான அரச மற்றும் தனியார் துறையினருக்குச் சொந்தமான கரையோர காணிகளை அடையாளம் காண்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இந்தப் பிரதேசத்தை சுற்றுலா வலயமாக அபிவிருத்தி செய்து மட்டக்களப்பை 2023 ஆம் ஆண்டில் சிறந்த சுற்றுலாத் தளமாக மாற்றுவது இதன் நோக்கமாகும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. சூம் ஊடாக நடைபெற்ற கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் கே.கருணாகரன் உட்பட பிரதேச செயலாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏகநாயக்க, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் செயலாளர் டபிள்யூ.ஏ.சூலானந்த பெரேரா, வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆர்.எம்.சி.எம். ஹேரத் மற்றும் நிறுவனங்களின் தலைவர்கள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

# ‘மனுஷி’ சிறுகதை நூல் வெளியீடு மட்டக்களப்பில் முழுமதி நாளன்று

மட்டக்களப்புமாவட்டசிரேஷ்ட ஊடகவியலாளரும், தற்போது புலம் பெயர்ந்து சுவிட்சர்லாந்து நாட்டில் தமிழ் இலக்கியத்தளத்தில் இயங்கிவருபவருமான சண். தவராஜாவின் 'மனுஷி' சிறுகதை நூல் வெளியீடும், அறிமுக நிகழ்வும் மட்டக்களப்பில் இடம்பெறவிருக்கின்றன.

மட்டக்களப்பு மகுடம் கலை, இலக்கிய வட்டத்தின் பௌர்ணமி கலை, இலக்கிய நிகழ்வின் 47 ஆவது தொடராக முழுமதி தினமான எதிர்வரும் டிசம்பர் 7 ஆம் திகதிகாலை 10 மணிக்கு இந்த நூல் வெளியீடும், அறிமுக நிகழ்வும் பிரபல இலக்கியவாதியும், படைப்பாளியுமான பேராசிரியர் செ. யோகராசா தலைமையில் மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

மகுடம்வி.மைக்கல்கொலினின்வரவேற்புரையுடன் இடம்பெறவிருக்கும் இந்த வெளியீட்டு நிகழ்வில், கிழக்கு பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் மா. செல்வராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி. ரூபி வலண்டினா பிரான்சிஸ், நூல் நயவுரையாற்றுவதுடன், ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலய அதிபர் கவிதாயினி திருமதி. சுதாகரி மணிவண்ணன் சிறப்புரையும் ஆற்றுவார்.

மூத்த எழுத்தாளர்களான எஸ்.எல்.எம். ஹனீபா, கவிஞர் செ. குணரத்தினம், கவிஞர். அ.ச. பாய்வா ஆகியோர் முதன்மைப் பிரதிகளைப் பெற்றுக் கொள்வார். நூலாசிரியர்சண்.தவராஜாசுவிட்சர்லாந்திலிருந்து ஸூம் தொழில்நுட்பம் மூலம் ஏற்புரையும் ஆற்றுவார்.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் இ.தேவஅதிரன் நிகழ்வின் இறுதியில் நன்றியுரையாற்றுவார். இந் நிகழ்வை கவிஞர் ஜி.எழில் வண்ணன் தொகுத்து வழங்கவுள்ளார்.

புலம் பெயர் மற்றும் வெளி மாவட்டங்களில் உள்ளவர்கள் ரீலிலிது மூலம் நிகழ்வில் இணையலாம். Zoom ID. 8997230363.

# சுற்றுலா வலயங்களுக்கு விசேட மின்விநியோகம்!

டிசெம்பர் மாதத்துக்கான இலங்கையின் சுற்றுலா வலயங்களுக்கான விசேட மின்சார விநியோகம் தொடர்பாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர அறிவித்துள்ளார்.

இதன்படி, நாடளாவிய ரீதியில் பகலில் ஒரு மணித்தியாலமும், இரவில் ஒரு மணித்தியாலம் 20 நிமிடமும் மின்வெட்டு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி வரை தொடரும்.

தெற்கு மற்றும் எல்ல சுற்றுலா வலயங்களுக்கு இன்று (வியாழக்கிழமை) முதல் ஒரு மணித்தியால இரவு நேர மின்வெட்டிலிருந்து விலக்கு அளிக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், டிசெம்பர் 15ஆம் திகதி நுரைச்சோலை நிலக்கரி அனல்மின் நிலையத்தின் மூன்றாவது மின்பிறப்பாக்கி தேசிய மின்வட்டத்துடன் இணைத்துக்கொள்ளப்படவுள்ளது.

இதன் மூலம் அனைத்து சுற்றுலா வலயங்களுக்கும், இரவு வேளைகளில் மின்வெட்டிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.


அதேநேரம், நாடளாவிய ரீதியில் இரவு நேர மின்வெட்டு ஒரு மணி நேரம் குறைக்கப்படும் என்றும் அமைச்சர் விஜேசேகர தெரிவித்தார்.

இதேவேளை, கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு காலங்களில் மின்வெட்டு அமுல்படுத்தப்பட மாட்டாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# காலாவதியான பொருள்கள் வைத்திருந்த 12 வர்த்தகர்களுக்குத் தண்டம் விதிப்பு!







யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பொது சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் பொது சுகாதார பரிசோதகர்கள் தொடர்ச்சியாக உணவகங்கள், பலசரக்கு கடைகள் என்பனவற்றை பரிசோதித்து வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக கடந்தமாதம் யாழ்நகர், குருநகர், வண்ணார்பண்ணை பொது சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் பொது சுகாதார பரிசோதகர்கள் குழு, பலசரக்கு கடைகளில் திடீர் பரிசோதனை மேற்கொண்டது. இதன்போது யாழ்நகர் பகுதியில் 6 பலசரக்கு கடைகளிலும் குருநகர் பகுதியில் 5 பலசரக்கு கடைகளும் வண்ணார் பண்ணை புதியில் ஒரு கடையும், திகதி காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த நிலையில் அதன் உரிமையாளர்கள் பொது சுகாதார பரிசோதகர்களிடம் சிக்கினர். திகதி காலாவதியான பொருள்களைக் கைப்பற்றிய பொது சுகாதார பரிசோதகர்கள், கடை உரிமையாளர்களுக்கு எதிராக மேலதிக நீதிவான் நீதிமன்றில் கடந்த 14.11.2022 ஆம் திகதி வழக்கு தாக்கல் செய்தனர். நேற்று (புதன்கிழமை) அந்த வழக்குகள் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இதன் போது கடை உரிமையாளர்கள் 12 பேரும் குற்றங்களை ஏற்றுக்கொண்டதையடுத்து மொத்தமாக 3 லட்சத்து 5 ஆயிரம் ரூபா தண்டப்பணமாக செலுத்து மாறும், திகதி காலாவதியான பொருள்களை அழிக்கு மாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

## கோட்டாவைக் கொலை செய்ய ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

ஜனாதிபதி மாளிகையில் கடந்த ஜுன் மாதம் 9ஆம் திகதியும் தங்கி நின்ற கோட்டாபய, தற்செயலாக அன்று காலை ரிவி ரிமோட்டை எடுத்து ரிவியைப் போட்டு செய்தியைப் பார்த்திருக்காவிட்டால் பின்வாசலால் தப்பியோடியிருக்கமாட்டார். அன்று போராட்டக்காரர்கள் அவரை அடித்துப் படுகொலை செய்திருப்பார்கள் – என்றும் விமல் எம்.பி. குறிப்பிட்டார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருக்கும் போது வெற்றிகரமாகச் செயற்பட்ட கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியானதும் தோல்வியடைந்தது எப்படி? கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியில் இருந்து தப்பியோடிய அன்று நடந்தது என்ன? அவரைக் கொல்வதற்குத் திட்டம் தீட்டப்பட்டதா?அந்தத் திட்டம் முறியடிக்கப்பட்டது எப்படி? ஆகிய கேள்விகளுக்கான பதில்களை வழங்கிய போதே விமல் வீரவன்ச மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கோட்டாபய தோல்வியடையப் பல காரணங்கள் உண்டு.ஒன்று ராஜபக்ச குடும்பம். மற்றது அவரின் சகாக்கள். அதிலும் பஸில் போன்றவர்கள் கோட்டாபயவை பிழையாக வழிநடத்தியமையே தோல்விக்குப் பிரதான காரணம்.

அதேவேளை, ஜனாதிபதி செயலாளராக இருந்த பீ.பீ.ஜயசுந்தரவின் தாளத்துக்குக் கோட்டாபய ஆடியமையும் அவரின் வீழ்ச்சிக்கு ஒரு காரணம்.

அடுத்தது அமெரிக்காவும் அவரின் தோல்விக்கு ஒரு கரணம். ஜனாதிபதி பதவியில் இருந்து ஓய்வுபெற்றதன் பின் அமெரிக்காவில் போய் பிள்ளைகளுடன், பேரப்பிள்ளைகளுடன் கடைசிக் காலத்தைக் கழிக்க வேண்டும் என்று விரும்பினார் கோட்டாபய. அதனால் அவர் அமெரிக்காவை அதிகம் பகைத்துக்கொள்ள விரும்பவில்லை.

அமெரிக்கத் தூதுவருடன் நல்ல உறவைப் பேணி வந்தார் கோட்டாபய. ஆனால், அமெரிக்கா டப்ள் கேம் ஆடியது. ஒருபுறம் கோட்டாபயவுடன் அமெரிக்கத் தூதுவர் இருப்பது போல் காட்டிக்கொண்டார். மறுபுறம், அவரைப் பதவி இறக்குவதற்காக வேலை செய்தார்.

கடந்த ஜுன் 9ஆம் திகதி காலை ஜனாதிபதி மாளிகையிலிருந்து கோட்டாபய தப்பியோடிய அன்று அவரை ஜனாதிபதி மாளிகைக்குள் வைத்தே கொல்வதற்கான ஒரு சதித்திட்டம் இருந்தது உண்மை.

போராட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகைக்கு வெளியே நின்று ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தார்கள்.

அப்போது உடன் இருந்த பாதுகாப்பு அதிகாரிகளிடம் பாதுகாப்பு ஏற்பாடு பற்றிக் கேட்கின்றார் கோட்டாபய. பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று கோட்டாபயவிடம் அவர்கள் கூறுகின்றார்கள்.

அப்போது அருகில் இருந்த ரிவி ரிமோட்டை எடுத்து ரிவியைப் போடுகின்றார் கோட்டாபய. அந்தவேளை போராட்டக்காரர்கள் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே வருவது ஒரு தனியார் சேனலில் காட்டப்படுகின்றது. ஆனால், பாதுகாப்புப் பலப் படுத்தப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு அதிகாரிகள் பொய் கூறினார்கள்.

அந்தக் காட்சியைப் பார்த்ததும்தான் கோட்டாபய பின்வாசலால் தப்பியோடினார். இல்லாவிட்டால் அவர் சிக்கி இருப்பார். போராட்டக்காரர்களால் அவர் அடித்துக் கொல்லப்பட்டிருப்பார். அவரைக் கொல்வதற்காக வகுக்கப்பட்ட திட்டம்தான் அது.

அவர் அந்தச் செய்தியை ரிவியில் தற்செயலாகப் பார்த்ததால்தான் அன்று உயிர் தப்பினார் – என்றார்.




விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.12.2022 இல் வெளியிடப்பெற்றது.